1991 சனவரி 25]

மாக உற்பத்தி செய்கிற கிழங்கு உற்பத்தியாளர்களுக்குப் பாது காப்புத் தரவும், அந்த உற்பத்தி சிறப்பாக நடக்கவும், மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி யின் மூலம் அந்தச் சங்கத்திற்குக் கணிசமான நிதி ஒதுக்கவும், அதே நேரத்தில் உற்பத்தியாகிற கிழங்கைப் பாதுகாத்து சேமிக்க கோடவுன் கட்டித் தர வங்கியில் கடனாக நிதி ஒதுக்கினால் வாய்ப்பாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கத்தின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்குப் பரிந்துரைக்காக அனுப்பினால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

கைராட்டை நூற்புக் கூடம்.

*11292—திரு. மு. முத்தையா :

மாண்புமிகு சமூகநலம்மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம், ஓசநூத்து ஆகிய இரண்டு ஊர்களில் கைராட்டை நூற்புக்கூடம் இயங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது ஒட்டப்பிடாரம் மற்றும் ஓசநூத்து ஆகிய ஊர்களில் மூன்று கிராமிய நூற்பு நிலையங்கள் இயங்கி வரு கின்றன.

(ஆ) வினா எழவில்லை.

கழிவு நீரேற்றுத் திட்டம்.

*2231— திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) மதுரை மாநகரில் விடுபட்ட பகுதிகளை ஒருங் கிணைத்து கழிவு நீரேற்றுத் திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?